1970 மார்ச் 7]

திரு. வை. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே தீபாவளியின்போது எவ்வளவு ரூபாய்க்கு கதர் விற்பனையானது? தமிழ்நாட்டில் எந்தப் பஞ்சாயத்து யூனியன் கதர் விற்பனையில் முதன்மையாக இருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த தகவல் இருக்கிறது. இரண்டு அபிவிருத்தி மாவட்டங்கள். ஒன்று திருச்சி, மற்றொன்று கரூர். திருச்சிராப்பள்ளி அபிவிருத்தி வட்டத்தில் தீபாவளியின்போது மொத்தக் கதர் விற்பனை ரூபாய 6,14,905.04; கரூர் அபிவிருத்தி வட்டத்தில் விற்பனை ரூபாய் 5,60,986.74; குளித்தலை ஊராட்சி ஒன்றியம் விற்பனையில் முதல் இடத்தைப் பெறுகிறது. அதன் விற்பனை ரூபாய் 1,04,509.61 ஆகும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, தீபாவளியின்போது கதர் வாங்கித்தான் தீர வேண்டுமென்று பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் சிப்பந்திகளைக் கட்டாயப்படுத்தியிருப்பது குறித்து அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படிக் கட்டாயப்படுத்தாமலிருக்க அரசால் என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏதோ ஒருசில இடங்களில் இருந்து அப்படிக் கட்டாயப்படுத்தியதாகப் புகார் வந்தது. அப்படிப் புகார் வந்தவுடனேயே, ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்குத் தந்திமூலம், அப்படி யாரையும் கட்டாயப்படுத்தக்கூடாது என்று உத்தரவிடப்பட்டது. இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கதர் உற்பத்தியில் செய்துள்ள மாறுதலையொட்டி, பலர் விரும்பிக் கதர் வாங்குகிறார்கள். கதர் நல்ல விற்பனையாகியிருக்கிறது. யாரையும் கட்டாயத்திற்குள்ளாக்கவில்லை.

லால்பகதூர் சாஸ்திரியவர்களின் உருவச்சிலை

*** 262 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமரர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களின் உருவச் சிலையை எழுப்புவதற்கு அனுமதி கேட்டிருந்த கோயம்புத்தூர் நகராட்சிக்குத் தமிழ்நாடு அரசு அனுமதி மறுத்ததா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) நகராட்சி நிதியிலிருந்து சிலை எடுக்கும் செலவை அனுமதிப்பதில்லை என்ற பொதுக் கொள்கையின் காரணமாக அனுமதி மறுக்கப்பட்டது.

[1970 மார்ச் 7

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை அமைக்க வேண்டுமென்று அனுமதி கோரி மாயூரம் நகராட்சியிலிருந்து விண்ணப்பம் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்துள்ளதா? ஆம் எனில், அரசாங்கம் என்ன முடிவு செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, சிலை அமைக்க வேண்டுமென்று நகராட்சியினர் கோரிக்கை அனுப்பிய போது, இந்த அரசாங்கத்தின் கொள்கை குறிப்பிடப்பட்டது. அதாவது சிலை அமைக்கும் செலவைப் பொதுமக்கள் நன்கொடை மூலம் நிறைவேற்ற வேண்டும். நகராட்சி நிதியிலிருந்து செலவழிக்கக்கூடாது என்று சொல்லப்பட்டது.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, மறைந்த இந்திய பிரதமர் திரு. லால்பகதூர் அவர்களுக்கு சிலை வைக்க கோவையில் தனிப்பட்ட காங்கிரஸ்காரர்கள் அல்லது காங்கிரஸ் தலைவர்கள் ஏதாவது மனுப் போட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சிலை நிறுவும் செலவை நகராட்சி நிதியிலிருந்து செலவழிக்கக்கூடாது என்றும், யாராவது அன்பளிப்பாகக் கொடுத்தால், அதோடு அதன் பராமரிப்புக்காக 20 சதவிகிதம் கொடுத்தால், அதை ஏற்றுக் கொள்ளலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் விளைவாகச் சிலை எடுக்கும் செலவை உறுதிப்படுத்த ஒரு சிலர் சேர்ந்து, நகராட்சித் தலைவர், துணைத் தலைவர், மற்றவர்கள் சேர்ந்து ஒரு குழு அமைத்துக்கொண்டு, நன்கொடைகள் திரட்ட ஏற்பாடுகள் செய்யப்படுவதாக ஆணையரிடமிருந்து அறிக்கை வந்தது. ஆனால் இப்பொழுது அந்தக் கட்சியில் பிளவு ஏற்பட்டிருப்பதன் காரணமாகத் தடை ஏற்பட்டிருக்குமோ என்னவோ தெரியாது.

திரு. கே. விநாயகம் : பெருந்தலைவர்களுக்குச் சிலை எழுப்புவதில் அபிப்பிராய பேதம் இல்லை; லால்பகதூர் சாஸ்திரி, காந்தி அடிகள், காமராஜர் போன்றவர்களுக்குச் சிலை வைக்க கையாளுகிற அதே கொள்கைதான் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை வைக்கவும் கையாளப்படுகிறதா? எந்த முனிசிபாலிடி, டிஸ்ட்ரிக்ட் போர்டு அணுகினாலும், அதே விதிகள்தான் கையாளப்படுகிறதா, அல்லது பணத்தை அதிகமாகச் செலவு செய்கிறார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நான் ஏற்கனவேயே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். மறைந்த மாமேதைகளானாலும், இப்பொழுது இருக்கும் தலைவர்களானாலும், சிலை வைப்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், அதற்கு நகராட்சி நிதியிலிருந்து செலவு செய்யப்படுவது தடைப் படுத்தப்பட்டிருக்கிறது. அப்படி நகராட்சிகளுக்குச் சிலை எடுக்க அனுமதி கொடுத்தால் ஒவ்வொரு கட்சிக்காரர்களும் வரும்போது, அவரவர்கள்

1970 மார்ச் 7]

அனுமதி கொடுக்கும் நிலை ஏற்பட்டு, நகராட்சிகள் சிலை எடுக்கும் காரியத்தைத் தவிர வேறு காரியம் செய்ய முடியாது என்ற காரணத்தாலேயே இந்தத் தடையை விதித்து இருக்கிறோம். மக்கள் முயற்சி எடுத்து, அந்தக் காரியத்தைச் செய்யவேண்டும் என்று முன்வந்தால் நல்லது. தமிழகத்தில் பேரறிஞர் அண்ணாவின் சிலை ஆங்காங்கே பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கிறது என்றால், அவர்களிடத்தில் அந்த அளவிற்கு அன்பு கொண்டிருக்கக்கூடிய தோழர்கள், மற்றவர்கள் நன்கொடை செலுத்தி அவை எடுக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தின் செலவில் எதுவும் எடுக்கப்படவில்லை. அப்படி மாயூரம் நகராட்சி அனுமதி கேட்டது மறுக்கப்பட்டிருக்கிறது. கடலூர் நகராட்சி மன்றம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. அதையும் நிராகரிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, முன்னாள் வீரர்—மன்னிக்கவும்—அகில இந்தியக் காங்கிரஸ் பழைய தலைவர் திரு. காமராஜர் அவர்களுக்கு சென்னையிலே சிலை எழுப்பப்பட்டிருக்கிறதே அது யாருடைய செலவில் எழுப்பப்பட்ட சிலை?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்பொழுதிருந்த மாநகராட்சி தன்னுடைய செலவில் அந்தச் சிலையை நிறுவிக் கொடுத்தது. 1968-ல், புதிய அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, உத்தரவு பிறப்பித்து, தடை போட்டது. ஆனாலும், உலகத் தமிழ் மாநாடு விழாவை ஒட்டித் தனிப்பட்ட முறையில் அது முக்கியமான ஒரு உலக விழா என்று ஓரிரு சிலைகள் எடுக்க, மாநகராட்சிக்கு அனுமதி கொடுத்திருக்கிறோம்.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள்

263 வினா.—திரு. வீ. மலைக்கண்ணன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள போகலூர், இளையான்குடி, பரமக்குடி ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள 154 ஊராட்சி மன்றங்களை நான்கு ஊராட்சி ஒன்றியங்களாகப் பிரிக்கும்படி பொதுமக்களிடமிருந்து ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அப்படிப் பிரிப்பதற்குச் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) எழவில்லை.